## நீதித்துறை நடுவர் நீதிமன்றம், குடியாத்தம், வேலூர் மாவட்டம்

முன்னிலை – திரு.M.N. ராஜநந்திவர்மசிவா. B.E., L.L.B.,
நீதித்துறை நடுவர், (முழு கூடுதல் பொறுப்பு)
குடியாத்தம்.

2024 ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 19 ம் நாள் திங்கள்கிழமை
திருவள்ளுவர் ஆண்டு 2055 சோபகிருது வருடம் மாசி திங்கள் 7 ஆம் நாள்

**ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.282/2023**
**CNR NO. TNVL11-004346-2022**

அரசுக்காக,
காவல் உதவி ஆய்வாளர்,
பேர்ணாம்பட்டு காவல் நிலையம்
குற்ற எண்.222/2018,
U/s. 143, 147, 294(b), 323, 324, 506(2) IPC . . . . குற்றமுறையிடுபவர்.

// எதிராக //

1) சதாம்உசேன்ள, வயது 30/2024,
த/பெ. அன்வர்பாஷா.
2) முகமது யாசின், வயது 36/2024,
த/பெ. ஜம்ருதின்.
3) ஜாகிர், வயது 43/2024,
த/பெ. அப்துல்மாலிக்.
4) ஜபர் செரிப், வயது 25/2024,
த/பெ. ரபிக்.
5) மொயின், வயது 32/2024,
த/பெ. நாசிர்காஹன்.

**அனைவரின் முகவரி:–**
ஜன்டா தெரு, சத்கார் கிராம்,
பேர்ணாம்பட்டு தாலூக்கா. . . . . எதிரிகள்.

| | | |
|---|---|---|
| 1. | வரிசை எண். | சிசி. எண். 282/2023. |
| 2. | காவல்நிலையத்தின் பெயர் மற்றும் குற்ற எண் | பேர்ணாம்பட்டு காவல் நிலையம் குற்ற எண்.222/2018. |
| 3. | குற்றஞ்சாட்டப்பட்டவர்களின் பெயர், வயது மற்றும் தந்தை பெயர் மற்றும் முகவரி | 1) சதாம்உசேன்ள, வயது 30/2024, த/பெ. அன்வர்பாஷா.<br>2) முகமது யாசின், வயது 36/2024, |

| | | |
|---|---|---|
| | | த/பெ. ஜம்ருதின்.<br>3) ஜாகிர், வயது 43/2024,<br>த/பெ. அப்துல்மாலிக்.<br>4) ஜபர் செரிப், வயது 25/2024,<br>த/பெ. ரபிக்.<br>5) மொயின், வயது 32/2024,<br>த/பெ. நாசிர்காஹன்.<br><u>**அனைவரின் முகவரி:–**</u><br>ஜன்டா தெரு, சத்கார் கிராம்,<br>பேர்ணாம்பட்டு தாலூக்கா. |
| 4. | சம்பவம் நடந்த தேதி | 26.05.2018. |
| 5. | முறையீடு தேதி | 26.05.2018. |
| 6. | குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் கைது செய்த நாள் | --- |
| 7. | குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் பிணையில் விடுவித்த தேதி /சரணடைந்த தேதி | A1 to A5 – 21.06.2018. |
| 8. | ஒப்படைத்தல்/அனுப்பி வைத்தல் தேதி (Commitment) | -- |
| 9. | விசாரணை துவக்கம் தேதி | 18.10.2023. |
| 10. | விசாரணை முடிவு தேதி | 06.02.2024. |
| 11. | தண்டனை அல்லது உத்தரவு | அரசு தரப்பில் இறுதி முடிவாக, இவ்வழக்கின் 1 முதல் 5 எதிரிகள் மீது சுமத்தியுள்ள குற்றச்சாட்டுக்களான இதச பிரிவுகள் 143, 147, 294(b), 324, 506(2)-இன் கீழ் எதிரிகள் குற்றவாளிகள் அல்ல என்று தீர்மானித்து, எதிரிகளை குவிமுச பிரிவு 248(1)ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது. இவ்வழக்கில் வழக்குச் சொத்தான சி.பி.250/2023 என்ற எண்ணில் தாக்கல் செய்யப்பட்டுள்ள அரை செங்கற்கள் மூன்று மேல் முறையீட்டு காலத்திற்கு பிறகு அழிக்க உத்தரவிடப்படுகிறது. இவ்வழக்கில் எதிரிகள் பிணையில் செல்வதற்காக பிணையதாரர்களால் எழுதி கொடுக்கப்பட்ட பிணைப் |

| | | |
|---|---|---|
| | | பத்திரங்களை மேல் முறையீட்டு காலத்திற்கு பின்னர் ரத்து செய்ய உத்தரவிடப்படுகிறது. |
| 12. | தேதி தீர்ப்பு நகலை வழங்குதல் அல்லதுகுற்றஞ்சாட்டப்பட்டவர் கள் மீதான காண்முடிவு/முடிவு | -- |
| 13. | காலதாமதத்திற்கான விளக்கம் | -- |

இவ்வழக்கானது கடந்த 04.08.2023 ஆம் தேதி நீதிமன்ற கோப்பில் எடுக்கப்பட்டு அரசுக்காக **அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை2,** அவர்களும், எதிரிகளுக்காக **திரு.S.சாந்தகுமார்**,B.A.,B.L., கற்றறிந்த வழக்கறிஞர் அவர்கள் முன்னிலையாகி நடைபெற்று வந்த வழக்கில் இறுதியாக விசாரணைக்கு வரப்பெற்று நடைபெற்று வந்த வழக்கில் இருதரப்பு வாதுரைகளை கேட்டறிந்தும், இதுநாள் வரை இந்நீதிமன்ற கவனமான பரிசீலனையில் இருந்து வந்ததும் இன்று 19.02.2024 ஆம் நாள் இந்நீதிமன்றம் வழங்கும்

## தீர்ப்புரை

**1) அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்:-**

1.1. கடந்த 23.05.2018 ம் தேதி மாலை 07.00 மணிக்கு ஜண்டா தெருவில் சென்றுக் கொண்டிருந்த போது பாய்மார்கள்(முஸ்லீம்) சேர்ந்தவர்கள் முஸ்லீம் பெண்களை கேலி செய்ததாகவும் அதை பார்த்த சாட்சி ராமச்சந்திரனின் மச்சான் மகன் பாண்டியன் என்பவர் தட்டி கேட்டதாகவும், அங்கிருந்த பாய்மார்கள் "நாங்க எங்கள் முஸ்லீம் பெண்களை கேலி செய்தா உங்களுக்கு என்ன" என்று கூறி சாட்சியின் மச்சான் மகன் பாண்டியனுக்கும் பாய்மார்களுக்கும் தகராறு நடந்தள்ளதாகவும், அதை தொடர்ந்து 26.05.2018 ம் தேதி இரவு 07.00 மணிக்கு சாத்கர் மந்தவெளி சந்திக்கும் இடத்தில் சாட்சியின் மச்சான் மகன் பாண்டியனிடம் முஸ்லீம் பசங்க தகராறு செய்வதாக கேள்விபட்டு சாட்சியும் அவரது மனைவி சகுந்தலா, மகன் ஆனந்தன் மற்றும் மணிகண்டன் மற்றும் சாட்சியின் உறவினர்கள், யுவராஜ், சுப்பு (எ) சுப்பிரமணி, ரங்கநாதன், சீதா ஆகியோர்கள் பாய்மார்களிடம் சென்று எதற்கு பாண்டியனிடம் பிரச்சனை செய்யுறீங்க என்று கேட்டதற்கு அங்கு இருந்த சாத்கர் ஜண்டாவீதியை சேர்ந்த

1 முதல் 5 வரையான எதிரிகள் சட்டவிரோதமாக ஒன்றுகூடி அக்கூட்டத்தில் உறுப்பினர்களாக இருந்ததாகவும், 1 முதல் 5 வரையான எதிரிகள் சாட்சியின் தரப்பினர்களிடம் கும்பலாக வீண்தகராறு செய்ததாகவும், 1 வது எதிரியாகிய நீர் சாட்சியின் தரப்பினரை பார்த்து "டேய் தேவிடியா மகன்களே நாங்கள் எதை செய்தா உங்களுக்கு என்ன என்று அசிங்கமாக திட்டியதாகவும், கீழே இருந்த கல்லால் சாட்சியின் வலது கை மீது அடித்து சாட்சிக்கு இரத்த காயம் ஏற்படுத்தியதாகவும், 2 வது எதிரியாகிய நீர் சாட்சியின் மனைவி சகுந்தலாவை கையால் முதுகு மீது அடித்து உள்காயம் ஏற்படுத்தியதாகவும், 3 வது எதிரியாகிய நீர் யுவராஜின் தலை மீது அடித்து இரத்தகாயம் ஏற்படுத்தியதாகவும், 4,5 வது எதிரிகளாகிய நீர் சீதா மற்றும் சகுந்தலாவை முதுகு, வயிறு ஆகி இடங்களில் கையாலும், கல்லாலும் அடித்ததாகவும், 1 வது எதிரியாகிய நீர் கல்லை காட்டி சாட்சியின் தரப்பினரை பார்த்து "இனிமேல் எங்களிடம் தகராறு செய்தால் உங்கள் அனைவரையும் கல்லால் அடித்து ஒழித்துவிடுவேன்" என மிரட்டிய குற்றங்களுக்காக எதிரிகளாகிய உங்கள் மீது இதச பிரிவுகள் 143, 147, 294(b), 323, 324, 506(2)-ன் கீழ் பேர்ணாம்பட்டு காவல் நிலைய காவல் உதவி ஆய்வாளரால் குற்றம் சுமத்தப்பட்டு குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2) இவ்வழக்கானது கடந்த 04.08.2023 ம் தேதி நீதிமன்றத்தில் குவிமுச பிரிவு 190(1)(b)–ன் படி கோப்பிற்கு எடுக்கப்பட்டு குற்றம் சாட்டப்பட்ட நபர்களுக்கு குவிமுச பிரிவு 204–ன் கீழ் அழைப்பாணை சார்வாக உத்தரவிடப்பட்டது.

3) இவ்வழக்கின் 1 முதல் 5 எதிரிகளுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டு 1 முதல் 6 எதிரிகள் நீதிமன்றத்தில் ஆஜரானபோது அரசு தரப்பு வழக்கின் ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் குவிமுச பிரிவு 207 ன் கீழ் 1 முதல் 5 எதிரிகளுக்கு இலவசமாக வழங்கப்பட்டன.

4) பின்னர் போதிய கால அவகாசத்திற்கு பின்னர் 1 முதல் 5 எதிரிகள் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றங்கள் குறித்து வினவியபோது 1 முதல் 5 எதிரிகள்

அக்குற்றங்களை மறுத்தார்கள். எனவே, இருதரப்பும் கேட்கப்பட்டு ஆவணங்களை பரிசீலனை செய்த வகையில், 1 முதல் 5 எதிரிகள் இவ்வழக்கின் படியான குற்றத்தை புரிந்துள்ளார் என்பதை அனுமானிக்க போதிய அடிப்படை ஆதாரங்கள் இருந்ததால் 1 முதல் 5 எதிரிகள் மீது 143, 147, 294(b), 323, 324, 506(2)-ன் கீழ் குற்றச்சாட்டுக்கள் வனைந்து வாசித்து விளக்கி கூறி வினவியபோதும் 1 முதல் 5 எதிரிகள் அக்குற்றச்சாட்டுக்களை மறுத்தார்கள். எனவே, இவ்வழக்கு அரசு தரப்பின் சாட்சிய விசாரணைக்கு உட்படுத்தப்பட்டது.

5) அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.5 வரையான சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டு அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.10 வரையான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டன.

6) <u>அரசு தரப்பு சாட்சிகளின் சுருக்கம்</u> :–

6.1. அ.சா.1 இராமசந்திரன் தனது சாட்சியத்தில் சுமார் 2 ½ ஆண்டுகளுக்கு முன்பு தேதி மற்றும் மாதம் நினைவில் இல்லை என்றும், இரவு 7.30 மணியளவில் தங்கள் ஊரில் மந்தவெளி என்ற இடத்தில் கூட்டமாக இருந்தது என்றும், அங்கு சென்று பார்த்த போது கூட்டத்தில் தவறி கீழே விழுந்து தனது கையில் காயம் பட்டது என்றும் சிகிச்சைக்காக பேர்ணாம்பட்டு அரசு மருத்துவமனையில் இரந்த போது போலீசார் தன்னிடம் கைரேகை வாங்கினார்கள் என்றும், தன்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள அ.சா.ஆ.1 கைரேகை மட்டும் தன்னுடையது என்றும், போலீசார் தன்னை விசாரித்தார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

6.2. அ.சா.2 சகுந்தலா தனது சாட்சியத்தில் சுமார் 5 ஆண்டுகளுக்கு முன்பு தேதி, மாதம் நினைவில் இல்லை என்றும், இரவு 8 மணியளவில் தனது ஊரில் ஜன்டா தெருவில் கூட்டமாக இருந்தது என்றும், தான் சென்று பார்த்த போது கூட்டத்தில் தவறி கீழே விழுந்து தனது காலில் காயம் ஏற்பட்டது என்றும், சிகிச்சைக்காக பேர்ணாம்பட்டு அரசு மருத்துவமனையில் இருந்த போது மருத்துவர் தன்னிடம் கையொப்பம் வாங்கினார் என்றும், போலீசார் தன்னை

விசாரிக்கவில்லை என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

6.3. அ.சா.3 யுவராஜ் தனது சாட்சியத்தில் சுமார் 5 வருடத்திற்கு முன்பு தேதி, மாதம் நினைவில் இல்லை என்றும், இரவு நேரத்தில் ஜான்டா தெருவில் கூட்டமாக இருந்ததாகவும், தான் சென்று பார்த்த போது தான் காவாவில் கீழே விழுந்து விட்டதாகவும் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தபோது மருத்துவர் தன்னிடம் கையொப்பம் வாங்கியதாகவும், போலீசார் தன்னை விசாரிக்கவில்லை என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

6.4. அ.சா.4 சீதா தனது சாட்சியத்தில் சுமார் 5 வருடத்திற்கு முன்பு சாத்கரில் உள்ள தெருவில் மாலை 6 மணியளவில் கூட்டமாக இருந்ததை பார்க்க சென்ற போது தன்னை தள்ளிவிட்டார்கள் என்றும், காலில் காயம் எற்பட்டது என்றும் சிகிச்சையில் பேர்ணாம்பட்டு அரசு மருத்துவமனையில் இருந்த போது மருத்துவர் தன்னிடம் கையொப்பம் வாங்கினார் என்றும், போலீசார் தன்னை விசாரிக்கவில்லை என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

6.5. அ.சா.5 சரவணன் தனது சாட்சியத்தில் தற்பொழுது பேர்ணாம்பட்டில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணியாற்றி வருவதாகவும், உதவி ஆய்வாளர் திரு.பாலவெங்கட்ராமன் என்பவர் கையெழுத்து தனக்கு நன்கு தெரியும் என்பதன் அடிப்படையிலும், ஆவணங்களின் அடிப்படையிலும் அவருக்காக சாட்சியம் அளிப்பதாகவும், கடந்த 26.05.2018ம் தேதி இரவு 21.30 மணிக்கு உதவி ஆய்வாளர் திரு.பாலவெங்கட்ராமன் நிலைய பொறுப்பில் இருந்த போது ராமசந்திரன் என்பவர் கொடுத்த அ.சா.ஆ.2 ஆன புகார் வாக்குமூலத்தினை பெற்று அதன் தன்மைக்கேற்ப நிலைய குற்ற எண்.222/2018 இதச பிரிவுகள் 143, 147, 294(b), 323, 324, 506(2)-ன் கீழ் அ.சா.ஆ.3 ஆன முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்ததாகவும், 27.05.2018ம் தேதி காலை 6 மணிக்கு உதவி ஆய்வாளர் சம்பவயிடம் சென்று சாட்சிகள் வேலு த/பெ. ராமசந்திரன் மற்றும் சுரேஷ் த/பெ. கணேஷ் ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு அ.சா.ஆ.4 பார்வை மகசர் மற்றும் அ.சா.ஆ.5 மாதிரி வரைபடம் தயார் செய்ததாகவும், பின்பு அன்றே 7 மணிக்கு சாத்கர் மந்தைவெளி மைதானம்

அருகில் மேற்படி சம்பவத்தில் பயன்படுத்தப்பட்ட அரை செங்கல் மூன்று மேற்படி சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகசர் மூலம கைப்பற்றியதாகவும், அரை செங்கல் மூன்று சா.பொ.1 முதல் சா.பொ.3 வரை என்றும், 1 முதல் 5 வரையிலான எதிரிகள் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் முன்எதிர்ப்பார்ப்பு பிணையில் சென்றதால் அவர்களை கைது செய்யவில்லை என்றும், பின்பு காயம்பட்ட சாட்சிகளுக்கு சிகிச்சை அளித்த மருத்துவரை விசாரித்து அ.சா.7 முதல் அ.சா.10 ஆன காயச்சான்றிதழ்களை பெற்றதாகவும், பின்பு இவ்வழக்கின் சாட்சிகள் 1 முதல் 9 வரையிலானவர்களை தனிதனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், பின்பு வழக்கின் புலன் விசாரணையை முடித்து எதிரிகள் மீது இதச பிரிவுகள் 143, 147, 294(b), 323, 324, 506(2)-ன் கீழ் இறுதி அறிக்கையை தாக்கல் செய்ததாக சாட்சியம் அளித்துள்ளார்.

6.6. மேற்குறிப்பிட்ட சாட்சிய விபரங்களிலிருந்து 1 முதல் 5 எதிரிகளுக்கு பாதகமாக அமைந்த சாட்சியங்களின் கூறுகளை குறித்து கேள்விகளாக குவிமுச பிரிவு 313(1)(ஆ)ன் கீழ் வினவியபோது, 1 முதல் 5 எதிரிகள் அந்த சாட்சிய கூறுகளை மறுத்தார்கள். தங்களது தரப்பில் விசாரணை செய்ய சாட்சிகள் இல்லை என்று கூறி தங்களது தரப்பை முடித்துக் கொண்டனர்.

6.7. இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினை என்னவென்றால், அரசு தரப்பு சாட்சிகள் மற்றும் குறியீடு செய்யப்பட்ட சான்றாவணங்களிலிருந்து 1 முதல் 5 எதிரிகள் புகார்தாரரை ஒன்று சேர்ந்து வழிமடக்கி, அசிங்கமான வார்த்தைகளால் திட்டி, கையால், மற்றும் செங்கல்லால் தாக்கி, கொலைமிரட்டல் விடுத்துள்ளார்கள் என்று அரசு தரப்பில் 1 முதல் 5 எதிரிகள் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா இல்லையா என்பதேயாகும்.

7) அரசு தரப்பு வழக்கறிஞரின் வாதுரை மற்றும் 1 முதல் 5 எதிரிகள் தரப்பு வழக்கறிஞரின் வாதுரை, சாட்சிகளின் சாட்சியங்கள் மற்றும் வழக்கு

ஆவணங்களின் அடிப்படையில் இவ்வழக்கு தீர்மானிக்கப்படுகிறது.

8) **அரசு தரப்பு வாதுரை** :–

8.1. அரசு தரப்பில் முன்னிலையான கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் அரசு தரப்பில் 1 முதல் 5 எதிரிகளுக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் நிரூபணம் செய்ய போதுமான வகையில் சாட்சியம் அளித்துள்ளதால், அரசு தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் 1 முதல் 5 எதிரிகள் மீதான குற்றத்ததை அரசு தரப்பில் நிரூபணம் செய்யப்பட்டுவிட்டதால் 1 முதல் 5 எதிரிகளுக்கு இதச பிரிவுகள் 143, 147, 294(b), 323, 324, 506(2)-ன் கீழ் தகுந்த தண்டனை வழங்கும்படியும் வாதிட்டார்.

9) **எதிரிகள் தரப்பு வாதுரை** :–

9.1. 1 முதல் 5 எதிரிகளுக்கும் இவ்வழக்கு சம்பவத்திற்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை. 1 முதல் 5 எதிரிகள் மீது பொய்யாக வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. இவ்வழக்கில் அ.சா.1 முதல் அ.சா.4 வரையிலான சாட்சிகள் பிறழ் சாட்சியாக மாறியுள்ளனர். வழக்கு ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டுள்ளன. அரசு தரப்பு 1 முதல் 5 எதிரிகள் மீது சுமத்தியுள்ள குற்றச்சாட்டுக்களை சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் நிரூபணம் செய்யவில்லை. எனவே, 1 முதல் 5 எதிரிகள் இதச பிரிவுகள் 143, 147, 294(b), 323, 324, 506(2)-ன் கீழ் குற்றவாளிகள் அல்ல என்றும் 1 முதல் 5 எதிரிகளை விடுதலை செய்து உத்தரவிடுமாறு கோரி வாதுரை எடுத்துரைக்கப்பட்டது.

9.2. அரசு தரப்பில் முன்னிலைப்படுத்தப்பட்ட சாட்சியங்கள் மிகுந்த கவனத்துடன் ஆராயப்பட்டன. அரசு தரப்பில் முன்னிலையான கற்றறிந்த குற்றத்துறை வழக்கறிஞர் நிலை–2 அவர்களின் இறுதி வாதமும் மற்றும் குற்றஞ்சாட்டப்பட்ட நபர்கள் தரப்பில் முன்னிலையன கற்றறிந்த வழக்கறிஞரின் வாதமும் மிகுந்த கவனத்துடன் கருத்தில் கொள்ளப்பட்டன.

9.3. அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்தும் தாக்கல் செய்யப்பட்டள்ள சான்றாவணங்களிலிருந்தும் இரு தரப்பு வாதங்களில் இருந்தும்

வழக்கு ஆவணங்களைப் பரிசீலனை செய்ததில் இருந்தும் தற்போது தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில் அரசு தரப்பில் 1 முதல் 5 எதிரிகள் மீது சுமத்தப்பட்டுள்ள இதச பிரிவுகள் 143, 147, 294(b), 323, 324, 506(2)-ன் கீழான குற்றச்சாட்டுக்கள் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா என்பதேயாகும்.

10) <u>தீர்வு</u> :-

10.1. இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினை குறித்து பரிசீலனை செய்கையில், இவ்வழக்கின் புகார்தாரர் அ.சா.1 இராமசந்திரன் தனது புகாரில் தனது நண்பர்களுடன் பேசிக்கொண்டு இருந்த போது 1 முதல் 5 எதிரிகள் ஒன்று சேர்ந்து வந்து தங்களை அசிங்கமாக வார்த்தைகளால் திட்டி, கையால் மற்றும் செங்கற்களாலும் அடித்து காயப்படுத்தி, கொலைமிரட்டல்விடுத்ததாக தெரிவித்துள்ளார் ஆனால் இவரின் முதல் விசாரணையில் சுமார் 2 ½ ஆண்டுகளுக்கு முன்பு தேதி, மாதம் நினைவில் இல்லை என்றும், தங்கள் ஊரில் மந்தவெளி என்ற இடத்தில் கூட்டமாக இருந்தது என்றும், அங்கு சென்று பார்த்த போது கூட்டத்தில் தவறி கீழே விழுந்து தனது கையில் காயம் ஏற்பட்டது என்றும் மருத்துவமனையில் இருந்த போது போலீசார் கேட்டதின் பேரில் கைரேகை செய்ததாகவும், சாட்சியம் அளித்துள்ளார். 1 முதல் 5 எதிரிகள் வழிமறித்து அசிங்கமாக திட்டியதாகவோ, கையால் மற்றும் ஆயுதத்தால் தாக்கி கொலை மிரட்டல் விடுத்ததாகவோ சாட்சியம் அளிக்கவில்லை. எனவே அ.சா.1 கொடுத்த புகார் வாக்குமூலம் உண்மை தன்மை வாய்ந்ததா என்பதில் சந்தேகம் எழுகிறது. மேலும் இவர் அரசு தரப்பிற்கு எதிராக பிறழ் சாட்சியாக மாறியுள்ளார். எனவே, அரசு தரப்பு அ.சா.1 சாட்சியத்தின் மூலம் 1 முதல் 5 எதிரிகள் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களை நிரூபணம் செய்யவில்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

10.2. இவ்வழக்கில் காயமுற்ற மற்றும் கண்ணுற்ற சாட்சிகளாக விசாரணை செய்யப்பட்ட அ.சா.2 முதல் அ.சா.4 வரையிலான சாட்சிகளின் சாட்சியத்தில்

எதிரிகளை தெரியும் என்றும் சுமார் 4 வருடத்திற்கு முன்பு தேதி, மாதம் நினைவில் இல்லை என்றும், தங்கள் ஊரில் சண்டை நடந்ததை பார்க்க சென்ற போது அங்கு கீழே விழுந்து காயம் ஏற்பட்டதாகவும், மருத்துவமனையில் இருந்த போது மருத்தவர் தங்களிடம் கையொப்பம் வாங்கியதாகவும், போலீசார் தங்களை விசாரிக்கவில்லை என்றும் சாட்சியம் அளித்துள்ளார்கள். 1 முதல் 5 எதிரிகள் தான் வழிமறித்து அசிங்கமாக திட்டியதாகவோ, கையால் மற்றும் ஆயுதத்தால் தாக்கி கொலை மிரட்டல் விடுத்ததாகவோ சம்பவத்தை நேரில் பார்த்ததாக சாட்சியம் அளிக்கவில்லை. அரசு தரப்பிற்கு எதிராக மாறி பிறழ் சாட்சியாக மாறியுள்ளார்கள். எனவே, அரசு தரப்பு அ.சா.2 முதல் அ.சா.4 வரையிலான சாட்சியங்களின் மூலம் 1 முதல் 5 எதிரிகள் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களை நிரூபணம் செய்யவில்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

10.3. அ.சா.5 சரவணன், சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் வழக்கு ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியமளித்துள்ளார். காவல் உதவி ஆய்வாளர் திரு.பாலவெங்கட்ராமன் அவர்கள் அ.சா.1 கொடுத்த அ.சா.ஆ.2 ஆன புகார் வாக்குமூலத்தை பதிவு செய்து காவல் நிலைய குற்ற எண்.222/2018, இதச பிரிவுகள் 143, 147, 294(b), 323, 324, 506(2)-ன் கீழ் அ.சா.ஆ.3 ஆன முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து சாட்சிய சான்றாவணங்களை முன்னிறுத்தியுள்ளதை குறித்தும் சாட்சியமளித்துள்ளார். இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரியான திரு.பாலவெங்கட்ராமன், காவல் உதவி ஆய்வாளர் அவர்கள் இந்நீதிமன்றத்தில் சாட்சியாக முன்னிறுத்தப்பட்டு விசாரணை செய்யப்படாததும் அரசு தரப்பு வழக்கிற்கு பாதகமாக உள்ளது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும் இவ்வழக்கில் சாட்சிகள் அனைவரும் முன்னுக்குப்பின் முரணமாக சாட்சியம் அளித்துள்ளதை பார்க்கும் பொழுதும், இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு சொத்துக்களான செங்கற்களை பற்றி எந்த சாட்சிகளும் குறிப்பிட்டு சாட்சியம் அளிக்காத நிலையில் சம்பவம் உண்மையில் நடந்ததாக என்பதில் சந்தேகம் எழுகிறது.

11) மேலும் எதிரிகளும், சாட்சிகளும் இவ்வழக்கில் சமாதனமாகிவிட்டதாக இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்த கு.வி.மு.ச பிரிவு 320ன் கீழான மனு இதச பிரிவுகள் 143, 147, 294(b), 323, 324, 506(2)-ன் கீழ் சமாதானம் செய்து கொள்ள இயலாத பிரிவுகள் என்பதால் மட்டுமே இந்நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டுள்ள நிலையில் அ.சா.5–ன் சாட்சியத்தை மட்டும் வைத்து எதிரிகளை தண்டிப்பது நீதியின் நலனுக்கு உகந்ததல்ல என முடிவு செய்கிறது.

12) இவ்வழக்கில் பிரதான சாட்சியான அ.சா.1 முதல் அ.சா.4 வரையான சாட்சிகள் அரசு தரப்பு வழக்கினை ஆதரிக்காமல் பிறழ் சாட்சியமளித்துள்ள நிலையில், மேற்கண்ட அரசு தரப்பு சாட்சி ஒத்துரைக்கப்படாத அ.சா.5ன் சாட்சியத்தை மட்டுமே வைத்து குற்றஞ்சாட்டப்பட்ட நபர்களுக்கு எதிராக இவ்வழக்கினை தீர்மானிக்க முடியாது என்று இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது. அ.சா.5 ஐ தவிர்த்து மற்ற அரசு தரப்பு சாட்சியான அ.சா.1 முதல் அ.சா.4 சாட்சிகள் குற்றஞ்சாட்டப்பட்ட நபர்களுக்கு எதிராகவோ அல்லது இறுதி அறிக்கையில் கண்டவாறு குற்றச் சம்பவம் நடந்தது என்றோ சாட்சியம் அளிக்கவில்லை. எனவே, அ.சா.5ன் சாட்சியத்தை மட்டும் வைத்துக்கொண்டு அரசு தரப்பு வழக்கு நிரூபிக்கப்பட்டுவிட்டது என்ற முடிவுக்கு வர முடியாது. எனவே, அரசு தரப்பில் 1 முதல் 5 எதிரிகள் மீதான குற்றச்சாட்டானது சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே, 1 முதல் 5 எதிரிகள் இதச பிரிவுகள் 143, 147, 294(b), 323, 324, 506(2)-ன் கீழ் குற்றவாளிகள் அல்ல என்று தீர்மானித்து, இவ்வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்ட நபர்கள் சந்தேகத்தின் பலனை பெற தகுதியுடையவர் ஆகிறார்கள் என்று இந்நீதிமன்றம் முடிவு காண்கிறது.

13) எனவே, மேலே விளக்கப்பட்ட விபரங்களை கருத்தில் கொண்டு பரிசீலனை செய்கையில், அரசு தரப்பில் 1 முதல் 5 எதிரிகள் மீது சுமத்தியுள்ள குற்றச்சாட்டுக்கள் போதிய சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களின் அடிப்படையில் நிரூபணம் செய்ய தவறியுள்ளது என்று இந்நீதிமன்றம் முடிவு

செய்கிறது.

**முடிவாக, இவ்வழக்கின் 1 முதல் 5 எதிரிகள் மீது சுமத்தியுள்ள குற்றச்சாட்டுக்களான இதச பிரிவுகள்** 143, 147, 294(b), 323, 324, 506(2)-**இன் கீழ் எதிரிகள் குற்றவாளிகள் அல்ல என்று தீர்மானித்து, எதிரிகளை குவிமுச பிரிவு 248(1)ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.**

இவ்வழக்கில் வழக்குச் சொத்தான சி.பி.250/2023 என்ற எண்ணில் தாக்கல் செய்யப்பட்டுள்ள அரை செங்கற்கள் மூன்று மேல் முறையீட்டு காலத்திற்கு பிறகு அழிக்க உத்தரவிடப்படுகிறது. இவ்வழக்கில் எதிரிகள் பிணையில் செல்வதற்காக பிணையதாரர்களால் எழுதி கொடுக்கப்பட்ட பிணைப் பத்திரங்களை மேல் முறையீட்டு காலத்திற்கு பின்னர் ரத்து செய்ய உத்தரவிடப்படுகிறது.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து–தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு இன்று 19.02.2024ம் நாள் என்னால் திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

ஒம்/– M.N.ராஜநந்திவர்மசிவா,
நீதித்துறை நடுவர்,
(முழு கூடுதல் பொறுப்பு)
குடியாத்தம்.

**<u>பின் இணைப்புகள்</u>**

**1) <u>அரசு தரப்பு சாட்சிகள்</u>**

1. அ.சா.1 திரு. இராமசந்திரன்.
2. அ.சா.2 திருமதி. சகுந்தலா.

3. அ.சா.3 திரு. யுவராஜ்.

4. அ.சா.4 திருமதி. சீதா.

5. அ.சா.5 திரு. சரவணன். (சிறப்பு உதவி ஆய்வாளர்).

**2) <u>அரசு தரப்பு சான்றாவணங்கள்</u>**

| | | |
|---|---|---|
| 1. | அ.சா.ஆ.1 | புகார் வாக்குமூலத்தில் உள்ள அ.சா.1ன் கைரேகை. |
| 2. | அ.சா.ஆ.2 | புகார் வாக்குமூலம். |
| 3. | அ.சா.ஆ.3 | முதல் தகவல் அறிக்கை. |
| 4. | அ.சா.ஆ.4 | பார்வை மகசர். |
| 5. | அ.சா.ஆ.5 | மாதிரி வரைபடம். |
| 6. | அ.சா.ஆ.6 | கைப்பற்றுதல் மகசர். |
| 7. | அ.சா.ஆ.7 | ராமசந்திரனின் விபத்து பதிவேடுடன் கூடிய காயச்சான்றிதழ். |
| 8. | அ.சா.ஆ.8 | சகுந்தலாவின் விபத்து பதிவேடுடன் கூடிய காயச்சான்றிதழ். |
| 9. | அ.சா.ஆ.9 | சீதாவின் விபத்து பதிவேடுடன் கூடிய காயச்சான்றிதழ். |
| 10. | அ.சா.ஆ.10 | யுவராஜின் விபத்து பதிவேடுடன் கூடிய காயச்சான்றிதழ். |

| | | |
|---|---|---|
| அரசு தரப்பு சான்றுப் பொருள் | - | அரை செங்கற்கள் மூன்று. |
| எதிரிகள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் | - | இல்லை. |
| எதிரிகள் தரப்பு சான்றுப் பொருள் | - | இல்லை. |

ஒம்/– M.N.ராஜநந்திவர்மசிவா,
நீதித்துறை நடுவர்,
(முழு கூடுதல் பொறுப்பு)
குடியாத்தம்.

**<u>குறிப்பு</u>**

1) வழக்கின் முடிவு சம்மந்தப்பட்ட காவல் நிலையத்திற்கு தெரிவிக்கப்பட்டது.
2) வழக்கு விசாரணையின்போது எதிரிகள் பிணையிலிருந்தனர்.
3)சாட்சிகள் எவரும் விசாரணைக்காக 3 நாட்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.

**<u>நகல்</u>**

மாண்புமிகு.தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர், வேலூர்

அவர்களுக்கு பணிந்து சமர்பிக்கப்படுகிறது.

//உண்மை நகல்//

நீதித்துறை நடுவர்,
(முழு கூடுதல் பொறுப்பு)
குடியாத்தம்.